# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1963 - 2016 අප්‍රේල් මස 12 වැනි අඟහරුවාදා - 2016.04.12**

*1963 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*


(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 888 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க** .- செத்சத யோகா நிகேதனய கார்ய பாரய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, மே மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## உடதும்பர பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டம்*

**திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகள்**

*(261 ஆவது அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) ஆம் உப பிரிவின் கீழும் 2016, பெப்புருவரி 29 ஆந் திகதி கொண்ட 172 ஆவது தீர்மான இலக்கத்தின் கீழ் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

டி. எம். ஆர். என். திசாநாயக்க,
செயலாளர்,
உடுதும்பர பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
உடுதும்பர,
2016, மாச்சு 23.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2013.06.28 ஆந் திகதியையும் 1816/42 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டதுமான திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகள், இந்தத் தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து உடதும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயற்படுத்தப்படுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*4-530*

---

## கம்பஹா மாநகர சபை

*1987ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தல் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தல் சட்டம்*

*கீழே குறிப்பிடப்பட்ட பெயருடையவரால் அவருடைய பெயருக்கு எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள களியாட்ட விடுதியை குறிப்பிட்ட முகவரியில் நடாத்திச் செல்வதற்கு 2016 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக என்னிடத்தில் விண்ணப்பித்துள்ளார் என்பதை 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தல் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தல் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் கீழ் அறியத்தருகிறேன்.*

*இக்களியாட்ட விடுதியின் அயலில் வசிப்பவர்களில் எவரேனும் ஒருவர் இக்களியாட்ட விடுதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து நான்கு வாரங்களுக்குள் தமது எதிர்ப்புக்கான காரணங்களை எழுத்துமூலமாக இரண்டு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்கும்படி இத்தால் அறியத்தருகிறேன்.*

*ஏ. டி. பி. ஐ. பிரசன்ன,
மாநகர சபை ஆணையாளர்,
கம்பஹா மாநகர சபை.*

| விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி | களியாட்ட விடுதியின் செயலாளரா, முகாமையாளரா, தலைவரா என்ற விபரம் | களியாட்ட விடுதியின் பெயர் | களியாட்ட விடுதியை நடாத்திச் செல்ல எதிர்பார்க்கும் இடம் |
|---|---|---|---|
| ஜே. விமல் கமகே, சாந்தி வீதி, கம்பஹா. | செயலாளர் | கம்பஹா களியாட்ட விடுதி | 15/2/1 மங்கள வீதி, கம்பஹா |

4-562

---

**நாவலப்பிட்டிய நகர சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி திணைக்களத்தின் (அனுமதிக்கப்பட்ட துணை விதி) சட்டம்*

**திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய துணைக்கட்டளைச் சட்டம்**

*(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி திணைக்களத்தின் (அனுமதிக்கப்பட்ட துணைவிதிகள்) விதியில் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் (255 ஆம் அத்தியாயமான) நகர சபை கட்டளைச் சட்டத்தின் 184 (அ) ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத்திற்கான தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

செயலாளர்,
நாவலப்பிட்டிய நகர சபை.

2016, மாச்சு 28.

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (குறித்த விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி திணைக்களத்தின் (அனுமதிக்கப்பட்ட துணைக்கட்டளைச்சட்டம்) சட்டத்தின் (2) ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின், உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் அமைக்கப்பட்ட 2013.06.08 ஆந் திகதிய 1816/42 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அறிக்கையின் பிரசுரிக்கப்பட்ட திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய துணைக் கட்டளைச் சட்டம்" இத்தீர்மானமானது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் நாவலப்பிட்டி நகர சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லைக்குள் செயற்படுத்துவதற்கு (255 ஆம் அத்தியாயமான) நகர சபை கட்டளைச்சட்டத்தின் 184 (அ) ஆம் பிரிவின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இத்தால் தீர்மானிக்கின்றேன். தீர்மான இலக்கம் : 36-2016.2016.01.19 ஆந் திகதி.*

4-629

---

**சிலாபம் பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணைவிதி) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி சிலாபம் பிரதேச சபையின் செயலாளர் ஐ. எம். டீ. இலங்ககோன் ஆகிய நான், பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துணைவிதியினை சிலாபம் பிரதேச சபைக்காக செயற்படுத்தப்பட வேண்டும் என்று 2016.01.20 ஆந் திகதிய 1722 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டது பற்றி இத்தால் நான் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

ஐ. எம். டீ. இலங்ககோன்,
செயலாளர் மற்றும் செயல்கள்,
கடமைகளை நிறைவேற்றுகின்ற
உத்தியோகத்தர்,
சிலாபம் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சிலாபம்.

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநிலைச் சட்டத்தின்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் (2) ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தின், உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2015.09.25 ஆந் திகதி 1933/40 ஆம் இலக்க இலங்கைச் சனநயாக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் வெளியிடப்பட்டது ம் பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துணை விதியினை, 1952ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை துணை விதிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குகளுக்கமைய சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக செயற்படுத்தப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய உரிய சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுப்படி நான் தீர்மானிக்கின்றேன்.*

*4-661*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.